**பூநகரி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

1. நிதிசார் கூற்றுக்கள்

1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 10 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பூநகரி பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பூநகரி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 15,500 | 05 | 222,440 |
| அதிகரித்துக் கூறல்கள் | - | - | 06 | 5,590,000 |

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,037,829 மொத்தப் பெறுமதியுடைய 09 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிசார் விளைவுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 1,433,801 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 2,728,190 விளைந்திருந்தது.

2.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய்க்கும் செலவினத்திற்கும் இடையே குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. வரவு, செலவுத்திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

2.3 வருவாய் நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவையாகவுள்ள வருவாய்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு, சபையின், மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ’000 | ரூபா ’000 | ரூபா ’000 |
| (i) | இறைகளும் வரிகளும் | - | - | |
| (ii) | குத்தகை வாடகைகள் | 1,791 | 1,353 | |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 907 | 358 | |
| (iv) | வேறு வருவாய் | 13,977 | 17,195 | 1,700 |

2.3.2 வருவாய் இழப்பு

சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்கள் தொடர்பாக ஆதனவரி கணிப்பிடப்படாமையால் சபையின் வருவாயில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.3 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

(அ) 2012 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 214,720 ஆகும். இதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 - 2011 வரையான காலப் பகுதிக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 737,774 கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தபோதிலும், அதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 தொலைத் தொடர்புக் கோபுரத்துக்கான கட்டணங்கள்

2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்ட 04 தொலைத் தொடர்புக் கோபுரங்களுக்கான கட்டணங்கள் அறவீடு செய்யப்படவில்லை.

### 2.4 இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1989 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி, நிர்வாக) ஒழுங்கு விதி | |
| அத்தியாயம் III<br>பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணங்களினது மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) 189 | ரூபா 66,670 பெறுமதியான காசோலையை பாதுகாப்பு வைப்பாக 2012 ஜுன் 13 இல் சபை பெற்றுள்ளது. இக்காசோலைக்குரிய பணம் வங்கியினால் மறுக்கப்பட்டது தொடர்பில் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ii) 396 | இரண்டு மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2011 செப்தெம்பர் 09 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி இலக்கம் 1722/27 உப பிரிவு 22 | சபையினது பாவனையிலுள்ள 14 வாகனங்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ஈ) | பொதுநிர்வாக அமைச்சின் 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபையின் வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 ஒக்தோபர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம் கணனிகள் மற்றும் துணைப்பாகங்களுக்குப் பதிவேடு பேணப்படவில்லை. |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்துக்கள்

பூநகரி சந்தை நிர்மாண வேலை ரூபா 4,281,016 கிரயத்தில் 01 ஆண்டிற்கு முன்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தபோதும், சபையால் அது பயன்படுத்தப்படாமையால் எதுவித வருவாயையும் பெறமுடியாது போனது.

### 2.5.2 சுவீகரிக்கப்படாத வாகனங்கள்

சபையின் பயன்பாட்டுக்கென அன்பளிப்புச் செய்யப்பட்ட 14 மோட்டார் வாகனங்களை உரிமை மாற்றம் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

## 2.6 பெறப்பட வேண்டிய கணக்குகள்

அரசிறைக் கடனாளிகள் கணக்கில் தொடர்ந்து காட்டப்பட்டவாறிருந்த ரூபா 188,255 பெறுமதியான் அரசிறைக் கடனாளிகள் அறிக்கையிடும் திகதி வரை அறவிடப்படாதிருந்தது.

---

2.7 அமுல்ப்படுத்தப்படாத திட்டம்

---

<u>சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைகள்</u>

(1) பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களிற்கான நன்கொடைகளை உரிய சனசமூக நிலையங்களுக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) தொழிற்பாட்டு விருத்திக்கும் பராமரிப்பிற்குமென ரூபா 262,068 நன்கொடையாக 2010ம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தபோதும் இதுவரை தொழிற்பாட்டு விருத்தியோ, பராமரிப்பு வேலைகளோ நடைபெறாமல் உள்ளமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருவாய் சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு

(ஈ) நன்கொடை

(உ) நானாவித வைப்புகள்

(ஊ) வரவு,செலவுத் திட்டம்

(எ) களஞ்சியப் பொருட்கள்